# சர்வதேச மன்னிப்பு ச் சபை
# உத்தியோகபூர்வ பத்திரிகை அறிவித்தல்

**10 ஏப்ரல் 2024 ஆம் திகதி GMT நேரப்படி 00:01 மணி வரை தடை விதிக்கப்பட்டது**
**(கொழும்பு நேரம் 05:30 மணி)**

## இலங்கை: ஆர்ப்பாட்டங்களின் போதான துஷ்பிரயோகங்களுக்குச் சட்ட அமுலாக்க அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டும்

**ஆர்ப்பாட்டங்**களை வன்முறையான வகையில் ஒடுக்குவதில் ஈடுபட்ட இலங்கையின் சட்ட அமுலாக்க அதிகாரிகள், பரவலான மனித உரிமை மீறல்களுக்குப் **பொறுப்புக்கூற** வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை இன்று வெளியிட்டுள்ள புதிய விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கை:'எந்தவொரு **ஆர்ப்பாட்ட**த்தையும் ஒடுக்கத் தயார்': **ஆர்ப்பாட்ட**ங்களின் போது ஆயுதங்களின் சட்டத்துக்கு முரணான பயன்பாடு: எனும் இலங்கை அறிக்கை மார்ச் *2022* மற்றும் ஜூன் *2023* க்கு இடையில் இலங்கையில் நடந்த *30* **ஆர்ப்பாட்ட**ங்களின் போது பலத்தைப் பயன்படுத்தியது குறித்து பகுப்பாய்வு செய்கிறது. சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆய்வு ,குறைந்த பட்சம் *17* போராட்டங்களில்- அவற்றில் அரைவாசிக்கு மேல் பகுப்பாய்வு செய்யப்பட்டன- கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர் பீரங்கியை சட்டவிரோதமாக பயன்படுத்துவதையும், இலங்கை சட்ட அமுலாக்க அதிகாரிகளால், தடியடிகளை தவறாக பயன்படுத்துவதையும் வீடியோ ஆதாரங்களுடன் வெளிப்படுத்துகிறது. சட்ட அமுலாக்க அதிகாரிகளின் நடத்தை பலத்தைப் பயன்படுத்துவதற்கான சர்வதேச சட்டத்தையும் நியமங்களையும் விட மிகவும் குறைவாகவே இருந்தன.

"ஆரம்பத்திலிருந்தே இலங்கைப் பொலிசார் 2022-23 ஆர்ப்பாட்டங்களை, அவை சட்டவிரோதமானவை, வன்முறையானவை என்றும் அவற்றை அடக்குவதற்குப் பலத்தை பயன்படுத்த வேண்டும் என்றும் ஊகித்தே அணுகினர். அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு மக்களுக்கு உரிமை உண்டு என்பதையும், ஆர்ப்பாட்டங்களை இலகுபடுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமுரிய ஒரு பொறுப்பை

அதிகாரசபைகள் கொண்டிருக்கின்றன என்பதையும் பொலிசார் அங்கீகரிக்கத் தவறினர். இதற்குப் பதிலாக, அவர்கள் பெரும்பாலும் அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்ர்களைக் குறிவைத்தனர், துரத்தியடித்தனர், உதைத்தனர், ”என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியாவுக்கான பிராந்தியப் பணிப்பாளர் ஸ்மிருதி சிங் கூறினார்.

2022 மற்றும் 2023 ஆம் வருடங்களில், இலங்கையர்கள் பெரிய அளவிலான ஆர்ப்பாட்டங்களிலும் கொழும்பில் அரகலய என அழைக்கப்படும் ஆக்கிரமிப்பு இயக்கமாகவும் இலங்கை முழுவதும் உள்ள பிற நகரங்களிலுள்ளவர்களும்  நீண்டகாலப் பொருளாதார நெருக்கடி, ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றுக்குப் பொறுப்புக்கூறுமாறு அழைப்பு விடுத்தனர். 2024 ஆம் ஆண்டு உட்பட, இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கின்ற, பெரும்பாலான அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராகச் சட்டத்திற்கு முரணாகப் பலத்தைப் பயன்படுத்துவதை சர்வதேச மன்னிப்புச் சபை ஆவணப்படுத்தியுள்ளது.

இதேநேரம், நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், 2017 ஆம் வருடம் முதல் இலங்கையில் உள்நாட்டு ஆயுதப் போரின் போது பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்டவர்களின்  உறவினர்களால் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்குப் பாதுகாப்பு படையினரும், புலனாய்வு முகமைகளும் கண்காணித்தல், அச்சுறுத்தல், துன்புறுத்தல் மற்றும் இடையூறுகளை மேற்கொள்ளல் என்பவற்றைத்தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேச மன்னிப்புச் சபை தனது விசாரணையின் போது முக்கியமாகக் கொழும்பு, பத்தரமுல்லை, களனி, யாழ்ப்பாணம் மற்றும் காலி ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட 30 ஆர்ப்பாட்டங்களின் சமூக ஊடகங்களில் சேகரிக்கப்பட்ட 95 சரிபார்க்கப்பட்ட காணொளிகளில் 39 நேர்காணல்களையும் திறந்த மூல விசாரணையையும் நடத்தியது. மார்ச் 2024 இல், சர்வதேச மன்னிப்புச் சபை இந்த அறிக்கையில் உள்ள குற்றச்சாட்டுகளைக் கோடிட்டுக் காட்டி உத்தியோகபூர்வ பதிலைக் கோரி இலங்கைப் பொலிசாருக்குத் தகவல் அனுப்பியது, ஆனால் வெளியிடப்படும் இந்த நேரம் வரை பதில் ஏதும் கிடைக்கவில்லை.

**கண்ணீர் புகை, தண்ணீர் பீரங்கிகள் மற்றும் தடிகள் என்பவற்றின் சட்டத்துக்கு முரணான பயன்பாடு:**

**"மனிதாபிமானமற்ற முறையில் கண்ணீர் புகை பயன்படுத்தப்பட்டது"**

பொலிசார் அமைதியான அல்லது பெரும்பாலும் அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களுக்குக் கலைந்து செல்லப் போதுமான வாய்ப்பை வழங்காமலும் காயமேற்படுவதற்கான ஆபத்தைக் குறைப்பதற்கு நியாயமான நடவடிக்கைகள் எவற்றையும் செய்யாமலும், அவர்களுக்கு எதிராக அதிகளவான கண்ணீர்ப்புகைக் குண்டுகளைத் திரும்பத் திரும்ப ஒரே பகுதியில் பயன்படுத்துவதைப் பின்பற்றினர். சர்வதேச சட்டத்தையும் தரநிலைகளையும் அதே போல் சிறந்த நடைமுறைகளையும் மீறி, 2023ல் அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களுக்குப் போதிய நேரத்தையும் வாய்ப்பையும் அளிக்காமல் அவர்களுக்கு எதிராகப் பொலிசார் தண்ணீர்ப் பீரங்கியையும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் பயன்படுத்தியதையும் சர்வதேச மன்னிப்புச் சபையால் சரிபார்க்கப்பட்ட காணொளிகள் காட்டுகின்றன. இது பல்வேறு ஆர்ப்பாட்டங்களினூடாக ஆவணப்படுத்தப்பட்டது, அதிலும் குறிப்பாக 2023 பெப்ரவரி 3 இல் கொழும்பில் நடைபெற்ற அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஆவணப்படுத்தப்பட்டது.

பொலிசாரும் தங்களுக்கு எதிராகத் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டதாகச் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு ஊடகவியலாளரும் ஆர்ப்பாட்டக்காரருமான திலின தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்: “அவர்கள் எம்மீது தண்ணீர் பீரங்கியையும் கண்ணீர் புகை குண்டுகளையும் பயன்படுத்திய பிறகு, எங்களைப் பின்தொடர்ந்து வந்து நாங்கள் கலைந்து செல்லும் போது எங்களை தாக்கினர். ஒரு தடியால் எனது முதுகில் தாக்கப்பட்டேன்.”

சர்வதேச மனித உரிமைகள் நியமங்களை மீறி, ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து செல்ல முயன்றபோது, ஆர்ப்பாட்டக்காரர்களின் பின்னால் இருந்து பொலிசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். அவர்கள் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பயன்படுத்தும்போது போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க மீண்டும் மீண்டும் தவறினர், மேலும் பாடசாலைகளுக்கு அருகில் மற்றும் வீதியில் என்று தெளிவான வெளியேற்றம் இல்லாத பகுதிகளில் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இது தேவையில்லாமல் சிறுவர்களையும் பாதசாரிகளையும் இரசாயன எரிச்சலூட்டும் விளைவுகளுக்கு வெளிப்படுத்தியது. குறைந்தது மூன்று வீடியோக்களைச் சர்வதேச மன்னிப்புச் சபை

பகுப்பாய்வு செய்தது, அவற்றில் சிறுவர்கள் கண்களைத் தேய்ப்பது, இருமுவது மற்றும் அசௌகரியத்தை அனுபவிப்பது போன்றவற்றைக் காட்டுகிறது.

ஒரு ஆர்ப்பாட்டக்காரரான உபேக்ஷா*, சர்வதேச மன்னிப்புச் சபையிடம் இவ்வாறு கூறினார்: "மக்களுக்கு மூச்செடுக்க முடியாத வரை பொலிசார் கண்ணீர் புகை குண்டுகளைப் பயன்படுத்தினார்கள். நாங்கள் ஒரு விகாரைக்குள் சென்று பாத்திரங்களையும் தண்ணீரையும் குழந்தைகளின் கண்களைக் கழுவப் பயன்படுத்தினோம்."

**"தண்ணீர் பீரங்கிகள் திடீரெனப் பாய்ச்சப்பட்டன... தண்ணீர் பாய்ச்சுதல்கள் ஒரே அளவாக இருந்தன"**

அமைதியான அல்லது பெரும்பாலும் அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராகவும், ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸ் அதிகாரிகளுக்கு எந்தவிதமான அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாத நிலைமைகளிலும், கலைந்து செல்ல முயன்ற நிலைமையிலும், பொலிசார் தண்ணீர் பீரங்கியைக் குறைந்த வீச்சில் பயன்படுத்தினர். கமராக்கள் மற்றும் பிற ஊடக உபகரணங்களின் தெளிவான மற்றும் புலப்படும் அடையாளங்கள் இருந்தபோதிலும், ஜூன் 2023 இல் கொழும்பில் நடந்த ஒரு ஆர்ப்பாட்டத்தில் நேரடியாக அறிக்கை செய்யும் ஊடக நிருபர் மீது பொலிசார் நேரடியாக தண்ணீர்ப் பீரங்கியைப் பாய்ச்சினர். நாட்டின் வடக்குப் பகுதியில், காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களின் அமைதியான ஆர்ப்பாட்டத்துக்கு எதிராகப் பொலிசார் தண்ணீர்ப் பிரயோகம் மேற்கொண்டனர்.

தேவிகா*-வின் கணவர் 15 வருடங்களுக்கு முன்பு வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்டார், சர்வதேச மன்னிப்புச் சபையிடம் தேவிகா இவ்வாறு கூறினார்: "நீர்த்தாரை எனது முகத்தை நோக்கிப் பாய்ச்சப்பட்டது, மேலும் எனது கண்ணில் மோசமாகத் தாக்கப்பட்டேன். எனது கண் வீங்கி நான் இருளில் மூழ்கினேன்."

**போதுமற்ற விசாரணையும் பொறுப்புக்கூறலும்:**

***"அவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களைத் தண்டிப்பது போல் இருந்தது"***

சட்ட அமுலாக்க முகமைகளினதும் பாதுகாப்புப் படைகளினதும்

பரவலான மனித உரிமை மீறல்கள் இருந்தபோதிலும், 2022 மற்றும் 2023 ஆம் வருடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது சட்டத்துக்கு முரணான வகையில் பலத்தைப் பயன்படுத்தியதற்காக ஒரு பொலிஸ் அதிகாரி மீதோ ஒரு இராணுவ உறுப்பினர் மீதோ வழக்குத் தொடரப்படவில்லை அல்லது குற்றம் சுமத்தப்படவில்லை. மனித உரிமை மீறல்களுக்காப் பொலிஸ் மற்றும் இராணுவ வீரர்கள் அரிதாகவே பொறுப்புக்கூற வேண்டிய இந்த பொறுப்புக்கூறல் பற்றாக்குறை, தண்டனையின்மையின் பரந்த கலாச்சாரத்தின் பின்னணியில் உள்ளது; இது சட்ட அமுலாக்க அதிகாரிகளை ஆர்ப்பாட்டங்களை வன்முறையாக ஒடுக்குவதைத் தொடர்வதற்கு ஊக்கமளிக்கிறது.

சட்ட அமுலாக்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான எந்தவொரு குற்றச்சாட்டும் அல்லது நியாயமான சந்தேகமும் இருந்தால், அது குறித்து வினைத்திறனான முறையில், பக்கச்சார்பற்ற முறையில் மற்றும் சரியான நேரத்தில் விசாரணை நடத்துவது சர்வதேச சட்டத்தின் கீழ் இலங்கை அரசின் பொறுப்பாகும். விசாரணைகளில் போதுமான நம்பகமான ஆதாரங்கள் கண்டறியப்பட்டால், குற்றப் பொறுப்புக்கூறல் உடையவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் சாதாரண சிவில் நீதிமன்றங்களில் நியாயமான விசாரணைகளில் நீதியின் முன்னிலைக்குக் கொண்டு வரப்படல் வேண்டும். இது சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட அனைத்து மட்டங்களிலும் பொறுப்புள்ளவர்களுக்குப் பொருந்தும்.

"ஆர்ப்பாட்டங்களில் சட்ட ஒழுங்கைப் பேணுவதற்கு பொலிசார் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான பலப்பிரயோக அணுகுமுறை சர்வதேச சட்டத்துக்கும் நியமங்களுக்கும் இணங்கவில்லை, அத்துடன் இலங்கை, அனைத்துலக குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை (ICCPR)-இன் ஒரு அரச தரப்பாகும். ICCPR-இன் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள, இலங்கையில் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதன் சுதந்திரத்திற்கான உரிமையை இப்பலப்பிரயோக அணுகுமுறை கட்டுப்படுத்துகிறது. எனவே, 2022-23 ஆம் வருடங்களில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது, பொலிசாரினால் சட்டத்துக்கு முரணாக பலத்தைப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் அனைத்து நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகளையும் அதிகாரசபைகள் அவசரமாக விசாரிக்க வேண்டும், அவ்வாறு செய்யத் தவறினால் அது மனித உரிமை மீறலாகும்” என்று ஸ்மிரிதி சிங் கூறினார்.

---
* அடையாளத்தைப் பாதுகாப்பதற்காகப் பெயர்கள் மாற்றப்பட்டன.